ழந்தைகளின் வாரப் பத்திரிகை

அணில்

மலர் 5
இதழ் 4
ஏப்ரல் 28
1950

வெள்ளிதோறும் ★ ஆசிரியர் : வை. கோவிந்தன் ★ அணா ஒன்று

உலக சைக்கிள் பந்தயத்திற்கு சென்னை சைக்கிள் வீரர்

பெல்ஜியம், பிரஸ்ஸல்ஸில் 1950 ஆகஸ்டில் நடக்கும் உலக சைக்கிள் பந்தயத்திற்கு நாஷனல் சைகிளிஸ்டு பெடரேஷன் ஆப் இந்தியாவின் சார்பாக சென்னையைச் சேர்ந்த ஸ்ரீ பி. எஸ். மணி அவர்களை அனுப்பப் போகிறார்கள்.

சோவியத் நீச்சல் வீரர்

சோவியத் நீச்சல் வீரர் வியோனிட் மெஷ்கோ 100 மீட்டர் தூரத்தை 1 நிமிஷம் 6·8 சகெண்டில் நீஞ்சினார். உலகத்திலேயே நீஞ்சுவதில் சூரர் இவர் என்று பெயரடைந்திருக்கிறார். இவருக்கு முன்னால் உலகப் போட்டியில் வெற்றி பெற்றவர் ஒரு அமெரிக்கர், ரிச்சார்டுஹோ என்பவர்தான்.

ரிச்சார்டுஹோ 100 மீட்டர் தூரத்தை 1 நிமிஷம் 7·3 சகெண்டில் நீஞ்சினார்.

படகிலே தங்கம்

பம்பாய்த் துறைமுகத்தில் படகிலே தங்கம் விளைந்த கதையை அணிலில் படித்தீர்கள். அந்தப் படகிலே மொத்தம் கிடைத்த தங்கம் 28, 739 தோலா. அதன் விலை ரூ. 53 லட்சம்.

விஷ வெற்றிலை

ஆஜ்மீரைச் சேர்ந்த பூர் என்னும் ஊரில் வெற்றிலைக் கடையிலே வெற்றிலை வாங்கித் தின்றார்கள். தின்றதும் மூவரும் யமலோகம் சென்றனர். நாலாவது ஆள் வெற்றிலையைத் தின்று மயங்கிய பொழுதே ஆஸ்பத்திரிக்குக் கொண்டுபோனதால் யமன் அவரை ஒப்புக் கொள்ளவில்லை. பிறகு போலீசார் வெற்றிலையைப் பரிசோதித்தார்கள். வெற்றிலை மூட்டியிலே பாம்பின் விஷம் கலந்திருந்ததாம்.

சோஷலிஸ்டுக் கட்சி

சோஷலிஸ்டுக் கட்சியில் 1, 48, 658 அங்கத்தினர் இருக்கின்றனர்.

இந்தியாவுக்குக் கடன்

சர்வதேச பாங்கி, இந்தியாவுக்கு தாமோதர ஆற்றின் பள்ளத்தாக்கு முன்னேற்றத்துக்கு 18, 500, 000 டாலர் கடன் தர ஒப்புக் கொண்டிருக்கிறது.

டாக்டர் விஜயலக்ஷ்மி

ஸ்ரீமதி விஜயலட்சுமி பண்டிட் நமது தலைவர் நேருஜியின் தங்கை உங்களுக்குத் தெரியும். அவர் இப்பொழுது அமெரிக்காவில் இந்தியாவின் தூதராக இருக்கிறார். அவருக்கு மார்ச்சு 17-ல் அமெரிக்காவில் மெசாசூசெட்ஸ் நகரத்தில் உள்ள வெல்லஸ்லி காலேஜின் 75வருட ஆண்டு விழாவில் சட்டத்தில் பேரறிஞர் (டாகடர்-ஆப் லாஸ்) என்ற பட்டம் கொடுத்தனர். படத்திலே (வலது பக்கம்) விஜயலட்சுமியும், வெல்லஸ்லி காலேஜின் எட்டாவது தலைவரான மார்கரெட் கிளப்பும் நிற்கின்றனர்.

ஒரு முட்டை போதும்

ஒரு கோழி முட்டையிட்டது. அந்த முட்டை 7 அவுன்ஸ் எடை இருக்கிறது. அந்த முட்டையின் சுற்றளவு 9 இஞ்சு. பாக்லாந்த் என்ற ஊரில் மில்பீல்டு என்ற வீட்டுக் கோழி ஒன்று இட்ட முட்டைதான் அது.

பயப்படாதே!

தாயார் (மகனிடம்) : டே, ஜக்கு! உன்னை அடிப்பேன். தங்கச்சியிடம் கெட்ட வார்த்தைகளைப் பேசாதே.

மகன்: அம்மா! நான் பேசவில்லை. எந்தெந்த, கெட்டவார்த்தைகளை அவள் பேசக் கூடாது என்று சொல்லிக் கொடுக்கிறேன். பயப்படாதே!

அணில்

1950ஞு ஏப்ரல்மீ 28உ வெள்ளிக்கிழமை

தங்கைகளே! தம்பிகளே!!

பாட்டிகதைப் போட்டிப் பரிசு விபரம் அடுத்த அணிலில் வெளி வருகிறது. நான்காவது எழுத்தறிவுப் போட்டிக்கு விடை-30-4. 50 வரை வரும். ஆதலால் மே மாதம் 12 உ இதழில் பரிசு விபரம் வெளியாகும். பத்தாவது எழுத்தறிவுப்போட்டியில் கலந்து கொண்டீர்களா?

சரி. உங்களுக்கு இப்பொழுது பள்ளிக்கூடம் விடுமுறை. விடுமுறை நாட்களில் நீங்கள் என்னென்ன செய்யலாம் தெரியுமா? 1. உங்கள் ஊரில் உள்ள சேரிகளில் எத்தனையோ பேர்கள் படிக்கத்தெரியாமல் இருப்பார்கள். அவர்களுக்கு மாலை நேரத்தில் எழுதப்படிக்க நீங்கள் கற்றுக் கொடுக்கலாம் 2. வீட்டுத் தோட்டத்தில் கீரை, கொத்துமல்லி. வெண்டை கத்தரி பயிரிடலாம். 3. அப்பா, அம்மா செய்யும் காரியங்களில் ஒத்தாசையாக இருக்கலாம். தங்கைகள் சமைக்கக் கற்றுக்கொள்ளலாம். தம்பிகள் அப்பா செய்யும் தொழிலில் பழகிக்கொள்ளலாம். இப்பொழுதே கற்றுக் கொண்டால் தானே பெரியவர்கள் ஆகும் போது சுலபமாக இருக்கும் 4. வெளியூர்களுக்குப் போகலாம். அங்குள்ள அதிசயங்களைப் பார்க்கலாம். அந்த ஊர் ஜனங்களின் பழக்க, வழக்கங்களை அறியலாம் 5. சென்னையில் உள்ளவர்கள்—சென்னைக்கு வருபவர்கள் மிருகக் காட்சிசாலை, மியூசியத்துக்கும் போகலாம்: தினசரிப் பத்திரிகை நிலையத்துக்குப் போய் தினசரிப் பத்திரிகை எப்படி அச்சிடுகிறார்கள் என்று பார்க்கலாம். டெலிபோன் ஆபீஸுக்குப் போய் டெலிபோன் எப்படி வேலை செய்கிறது? இன்னும் இது போன்று நீங்கள் தெரிந்து கொள்ள வேண்டியவைகளையும் தெரிந்து கொள்ளலாம்.

விடுமுறையை எப்படிக் கழித்தீர்கள் என்பதை ஒரு புத்தகத்தில் தினமும் எழுதுங்கள். நீங்கள் எழுதிய அந்தப் புத்தகத்தை எனக்கு ஜூன் மாதம் 15உக்குள் அனுப்புங்கள். அவைகளுக்குப் பரிசு உண்டு. நன்றாக இருப்பவைகளுக்கு முதல் பரிசு ரூ. 25 பெறுமானம் உள்ள சாமான்கள், படப் புத்தகங்கள். இரண்டாவது பரிசு ரூ 15 பெறுமானம் உள்ள புத்தகங்கள் சாமான்கள். மூன்றாவது பரிசு ரூ. 10 பெறுமானம் உள்ள சாமான்கள், புத்தகங்கள். என்ன? இன்று முதல் எழுதுகிறீர்களா?

இந்த இதழில் ஒரு துப்பறியும் கதையும், கடலோடியின் கதையும் பிரசுரிப்பதாக போன வாரம் சொல்லியிருந்தேன். படம் போடச் சுணங்கியதால் வெளியிடவில்லை. தம்பி ஒருவன் எழுதிய ஒரு துப்பறியும் கதை இந்த இதழிலே வந்திருக்கிறது படியுங்கள்.

குஷ்டரோக மருந்து.

பத்து வருஷ ஆராய்ச்சியின் விளைவாக குஷ்டரோகத்தின் சிகிச்சைக்கு முதல்தரமான ஒரு மருந்து கண்டுபிடிக்கப்பட்டிருக்கிறது. இதன் பெயர் ஸல்பெட்ரோன். இது ஸல்பா வகை மருந்துகளில் ஒன்று. சிறிய மாத்திரைகளாக இப்பொழுது விற்கப்படுகிறது. இந்த மாத்திரைக்கு ருசி எதுவும் கிடையாது. உலகமெங்கும் பரிசோதனை செய்து பார்த்து இதுவே முதன்மையான மருந்து என ஒப்புக்கொள்ளப்பட்டிருக்கிறது. நாள் பட்ட குஷ்ட வியாதிகள் கூட இந்த மருந்தின் மூலம் குணப்படுகின்றன. இதைக் கண்டுபிடித்தவர்கள் டாக்டர் டி. ஏ. ஹென்றி, டாக்டர் பின்யு. எச். கிரே.

குட்டிக் காமிரா

1 அங்குலம் நீளம், 1 அங்குல அகலம், $2\frac{1}{2}$ அங்குல உயரமுள்ள ஒரு காமிராவை ஒரு ஜப்பானியர் செய்திருக்கிறார். அதன் விலை ரூ 100/-

தண்ணீரைக் கொண்டு மோட்டார் ஓட்டலாம்

பாரிசைச் சேர்ந்த எம். போலி நாக் என்பவர் தண்ணீரைக் கொண்டு நீர்மூழ்கிக் கப்பலை ஓடும்படி செய்ய ஒரு வழி கண்டு பிடித்திருக்கிறார். இவர் இந்த விஷயமாக ஆராய்ச்சிகளை நடத்த பிரெஞ்சு கடற்படை காரியாலயத்தார் இவருக்கு எல்லா வசதிகளும் செய்து கொடுத்திருக்கின்றனர். இந்த முறையில் மோட்டார் கார், ரயில்வே இஞ்சின் முதலியவைகளையும் தண்ணீராலேயே ஓட்டச் செய்யலாம் என்று அவர் சொல்லுகிறார்.

தேனீக்கள். பிரிட்டனில் 240 வகையான தேனீக்கள் இருக்கின்றன.

வௌவால் வெய்யில் காலங்களில் மற்ற பறவைகளைப் போல் குளிர் பிரதேசங்களுக்குச் செல்வதில்லை. பத்திரமான இடங்களிலே. பகலெல்லாம் தூங்கும். வெய்யில் தணிந்ததும் மாலை நேரங்களில் வெளியே பறந்து திரியும்.

பெரிய வண்ணாத்திப்பூச்சி நியூ கினியாவில் இருக்கிறது. குறுக்களவு 13 இஞ்சி நீளம் இருக்கும். அதற்கு 'பறவைச் சிறகு, என்று பெயர்.

தொட்டால் சிணுங்கியைத் தொட்டால் கை பட்டவுடனே இலைகளை அது மூடிக் கொள்ளும்.

கறுப்பு அன்னம் ஆஸ்திரேலியாவிலும் டாஸ்மேனியாவிலும் இருக்கிறது

நல்ல தேனீ கூட்டில் 50,000 முதல் 80,0000 தேனீக்கள்வரை இருக்கும்.

பெரியமான். உலகத்திலேயே பெரியமான் வட அமெரிக்காவில் இருக்கிறது. அதை 'மூஸ்' என்பார்கள். 7 அடி உயரம் இருக்கும். 1120 பவுண்டு எடை இருக்கும். திடகாத்திரமான 8பேர்களின் நிறைஇருக்கிறது.

க்ஷயமருந்து

"இது வரை குணப்படுத்த, முடியாமல் இருந்து வந்த மூளை, முதுகெலும்பு க்ஷயத்தைக் குணப்படுத்தக்கூடிய மருந்து ஸ்ட்ரெப்டோமைஸின் தான்" என்று 16 தேச டாக்டர்கள் முடிவு செய்திருக்கின்றனர். இந்த மருந்து 1945-ல் அமெரிக்காவில் கண்டுபிடிக்கப்பட்டது. இந்த மருந்தை சரியானபடி உபயோகிப்பதற்கான வழிகளையும் இவர்கள் வகுத்திருக்கின்றனர்.

தபால் ரயில்

லண்டன் தெருக்களுக்கடியில் தபாலுக்கென்றே பிரத்தியேகமாக ஒரு ரயில்வே இருக்கிறது. உலகத்திலேயே எந்த இடத்திலேயும் இந்த மாதிரி கிடையாது. தானாகவே ஓடுகிறது, தானாகவே நிற்கிறது! ஒரு வருஷத்திற்கு 39,50,00,000 தூரம் போகிறது. 7,50,000 டன் தபால் சாமான்களை ஏற்றிச் செல்லுகிறது.

ஒருவகை கோதுமையை இந்தியா முழுவதிலும் உணவுப் பொருளாக உற்பத்தி செய்யலாம் என்று கண்டு பிடிக்கப்பட்டுள்ளது. பெங்களூர் விஞ்ஞானக் கழகத்தைச் சேர்ந்த ஸ்ரீ பி. எஸ். பைரோதி என்பவர் இது சம்மந்தமாக ஆராய்ச்சி நடத்தி "இந்த வகை கோதுமையை இந்தியா முழுதும் வெற்றிகாமாக உற்பத்தி செய்யலாம்" என்று தெரிவித்திருக்கிறார்.

சமுத்திர மட்டத்திற்குக் கீழான பகுதிகளில் எல்லாம் இந்தவகைக் கோதுமையை உற்பத்தி செய்யலாம் என்றும், இந்தியாவில் ஒரு முக்கிய மாற்று உணவாக இதை உபயோகப் படுத்தலாம் என்றும் அவர் சொல்லுகிறார். இந்த ரகக் கோதுமை மாவினால் செய்யப்பட்ட ரொட்டி அமெரிக்காவில் ஒரு விசேஷ உணவாகக் கொள்ளப் படுகிறது. போஷாக்குசத்தைக் கவனிக்கும்போது அரிசியைவிட இந்த வகைக்கு கோதுமை சத்துள்ளதாக இருக்கிறது. அரிசியோ, கோதுமையோ பயிரிட முடியாத நிலங்களில் எல்லாம் இந்த வகைக் கோதுமையைப் பயிரிடலாம். இந்த தானியத்தை பரீட்சார்த்தமாக தொழிலாளர் க்ஷேம அபிவிருத்தி ஸ்தாபனம் ஒன்றைச் சேர்ந்த பண்ணையில்பயிரிட்டுப்பார்த்ததில் நல்லபலன் ஏற்பட்டதாம்.

இந்தியாவுக்கு பாகிஸ்தான் 1½ லட்சம் டன் கோதுமை சப்ளை செய்யப் போகிறது. மற்றும் 40 லட்சம் டன் சணலும் கிடைக்கும். 20 ஆயிரம் டன் சணல் பொருள்களையும், 45 ஆயிரம் பருத்தி ஜவுளி பேல்களையும், 5 ஆயிரம் பருத்தி நூல் பேல்களையும் 7 ஆயிரம் டன் கடுகு எண்ணெய், 50 ஆயிரம் எஃகுத்தகடுகள், 10 ஆயிரம், டன் மோட்டார்டயர் அதுசம்மந்தப் பட்ட பொருள்கள் 21 ஆயிரம் டன் சிமெண்டு, 5 லட்சம் ராத்தல் புகையிலை, 50 ஆயிரம் டன் மரக்கட்டைகள், 50 லட்சம் ரூபாய் மதிப்புள்ள கம்பளித் துணிகளையும் பாகிஸ்தான் இந்தியாவிலிருந்து வாங்கும். நேருஜி 26ந்தேதியன்று கராய்ச்சிக்குச்சென்றார். அங்கு அவருக்கு அமோகமான ... ...ங்கள்.

வர்ணமில்லாப் பறவை

ச. மு. பிள்ளை.

ஆண்டவன் வானத்தையும் வையகத்தையும் சிருஷ்டித்தான். பூமியை மலர்க் கம்பளங்களைக் கொண்டு மூடினான். சோலைகளை வளர்த்து கோயிலாக்கினான். அப்போது இந்தக் கோயில்களில் சங்கீதத்தை நிரப்ப வேண்டுமென்ற ஆசை அவனுக்கு ஏற்பட்டது. ஆகவே, அவன் பட்சி ஜாதிகளை சிருஷ்டி செய்தான்.

பட்சிகளிலே பல ரகங்கள் உண்டாயின. சில பெரியவை; சில சிறியவை; சில நெட்டையானவை; சில குட்டையானவை; சில பருத்தவை; சில மெலிந்தவை. ஆகவே, பல்வேறு உருவங்களாகப் பட்சி ஜாதிகள் விளங்கின.

அவைகளுக்கு வர்ணம் பூச ஆசைப் பட்டான் ஆண்டவன். ஆதலின் அவை வரிசையாக நிறுத்தப் பட்டன. வரிசையின் முதற் கோடியில் பெரிய பட்சிகள் நிறுத்தப்பட்டன. கடைசிக் கோடியில் சிறிய பட்சிகள் நிறுத்தப்பட்டன.

வர்ணம் பூசுவதற்கு வெகு நேரம் பிடித்தது. சிறிய பறவைகளில் ஒன்று மிகவும் 'துரு துரு' வென்று காணப்பட்டது. ஓரிடத்திலும் அது நிற்கவில்லை. இப்படியும் அப்படியும் குதித்துக் கொண்டிருந்தது. அதன் முறை வருவதற்கு இன்னும் ரொம்ப நேரம் ஆகும் போல் அதற்குப் பட்டது. உடனே 'ஜிவ்' வென்று கிளம்பி உயர பறக்கத் தொடங்கியது.

அப்போது தான் படைக்கப்பட்ட அந்தக் குருவிக்கு வானத்தின் அழகு அற்புதமாகத் தோன்றியது. நீல வானத்தில் மிதந்து கொண்டிருக்கும் வெண் மேகங்களை உராய்ந்து கொண்டு அந்தக் குருவி பறக்கலாயிற்று.

கீழே குனிந்ததும் பூலோகத்தின் அழகு முதன் கருத்தைக் கவர்ந்தது. 'விர்' ரென்று கீழே இறங்கியது. மரத்துக்கு மரம் பறந்தது; குன்றுக்குக் குன்று பறந்தது; ஆற்றுக்கு ஆறு பறந்தது. பூலோகத்தின் அழகில் அது தன்னை மறந்தது.

திடீரென்று அதன் சட்டைக்கு இன்னும் வர்ணம் பூசப்படவில்லை யென்பதை அது நினைத்துக் கொண்டது. தான் நீண்ட நேரம் தாமதித்து விட்டதாகவும் அது நினைத்துக் கொண்டது. அவ்வளவு தான் தாமதம்! வானத்திற்குப் பறந்தது. முன்பு பட்சிகள் நின்றிருந்த இடத்தை அடைந்தது. அங்கு ஒரு பட்சியும் காணோம்.

ஆண்டவன் அப்போது தான் தனது வர்ணத் தூரியத்தைக் கழுவிக் கொண்டிருந்தார். வர்ணங்களெல்லாம் ஆய்விட்டன.

இதைக் கண்ட அந்தக் குருவி ஒரு மரத்தின் கிளையில் உட்கார்ந்து தேம்பித் தேம்பி அழ ஆரம்பித்தது. ஆண்டவன் அதனருகில் வந்து "ஏன் அழுகிறாய்?" என்று கேட்டார். அப்போது, தான் முட்டாள் தனமாகப் பறந்து போனதால், தனது சட்டைக்கு வர்ணம் பூசப்படாமல் போய் விட்டது என்று கூறியது.

ஆண்டவன் அது உண்மையிலேயே துக்கப்படுவதை அறிந்தார். அதை மெதுவாகத் தடவிக் கொடுத்தார். கடவுளின் கை அதன் மீது பட்டதும் அது மட்டற்ற மகிழ்ச்சியடைந்தது. வர்ணக் கலயங்களைப் பார்த்த போது எல்லாம் ஆகி விட்டிருந்தன. ஆனால் ஒரு தட்டில் பல வர்ணத் துண்டுகள் ஒட்டிக் கொண்டிருப்பதைக் கண்டார் ஆண்டவன். உடனே அவற்றைச் சுரண்டியெடுத்துக் குழைத்து அந்தக் குருவியின் சட்டைக்கு வர்ணம் பூசினார்.

அந்தக் குருவிதான் இன்று பல வர்ணச் சிறகுகளுடன் நாம் பார்க்கும் பஞ்ச வர்ணக் கிளி.

* * *

இது என்ன அதிசயம்? வீடு கட்டுகிற அதிசயம் தான். வீடு கட்டுகிறார்களா? கட்டவில்லை. சேர்க்கிறார்கள். வீட்டின் மேல் தளத்தை அப்படியே கட்டிய வீட்டின் மேல் வைக்கிறார்கள். இந்தத் தளம் சிமெண்டால் செய்யப் பெற்றது. இந்தத் தளம் 17 டன் கனமுடையது. தளத்தை மேலெழுப்பி வீட்டின் மேல் வைக்கும் 'தூக்கி'யில் கொக்கிகளோ, ஆணிகளோ கிடையாது. 'தூக்கி' காற்றின் உதவியால்தான் தூக்கி வைக்கிறது. இந்தத் தூக்கிக்கு 'வாகுவம் லிப்டர்' என்று பெயர்.

... பிடித்தான்

கண்ணன் சகெண்ட்பாரம் படிக்கிறான். கெட்டிக்காரன். படிப்பதில் மட்டுமா கெட்டிக்காரன்? விளையாடுவதிலும் கெட்டிக்காரன். கிரிக்கெட் என்றால் கிருக்குதான் அவன்.

அவனுக்குக் கோடை விடுமுறை. அவனுடைய தாத்தா, பாட்டி, மாமா எல்லோரும் கோயில்பட்டி அருகே உள்ள கிராமத்தில் இருக்கிறார்கள். பேரனைப் பார்க்க பாட்டி ஆசைப்படுவாள் அல்லவா? கண்ணனுடைய அப்பாவுக்கு ஒரு கடிதம் வந்தது. கோடை விடுமுறைக்கு கண்ணனை கோயில்பட்டிக்கு அனுப்பும்படி தாத்தா எழுதியிருந்தார். கண்ணனும் பாட்டியிடத்தில் ரொம்பவும் பிரியம் உள்ளவன். பாட்டியிடம் கதை கேட்கலாமென்று வேறு எண்ணியிருந்தான். ஆதலால் அப்பாவிடம் "அப்பா, பாட்டிதாத்தாவைப்பார்த்து விட்டு வருகிறேன்" என்றான். அப்பாவும் சம்மதித்தார்.

அடுத்தநாள் காலையில் ஸ்டேஷனுக்கு அப்பாவும் மகனும் வந்தார்கள். காலை ஏழரை மணிக்கு திருவனந்தபுரம் எக்ஸ்பிரஸ் வெகு வேகமாக வந்து 'சரக்' கென்று நின்றது. கண்ணனுக்கு டிக்கட் எடுத்தாச்சு. வண்டியிலே ஏறினான் கண்ணன். கோயில்பட்டிக்காரர் ஒருவர் வண்டியிலே உட்கார்ந்திருந்தார். அவரிடம் "பையனைக் கொஞ்சம் கவனித்துக் கொள்ளுங்கள். அவனை அவன் பாட்டி வீட்டில் விட்டுவிட வேண்டும்" என்றார் அப்பா. "அதற்கென்ன, முத்துசாமிபிள்ளை வீட்டில் தானே. பத்திரமாக பையனை அவர்களிடம் கொண்டுபோய்விட்டு விடுகிறேன்" என்றார் கோயில்பட்டிக்காரர்.

டாங் டாங் என்று மணியடித்தது. கார்டு 'உவி, உவி, உவி' என்று ஊதிக்கொண்டே பச்சைக் கொடியைக் காண்பித்தார். வண்டி புறப்பட்டது.

கண்ணனிடம் நிறையப் புத்தகங்களும், பத்திரிகைகளும் இருந்தன. படித்துக்கொண்டே இருக்கிறான். வண்டியும் போய்க்கொண்டே இருக்கிறது. வழியிலுள்ள ஸ்டேஷன்களில் வண்டி நிற்கும்போதுகூடப் படித்துக் கொண்டிருந்தான். படிப்பதிலே எவ்வளவு ஆசை பார்த்தீர்களா?

பகல் 12மணிக்கு கோயில்பட்டிக்கு ரயில் வந்தது வண்டியிலிருந்து எல்லோரும் இறங்கினார்கள். கண்ணனும் இறங்கினான். கண்ணனின் மாமா மகன் ஷண்முகமும், கண்ணனின் மாமாவும் ஸ்டேஷனுக்கு ஏதோ காரியமாக வந்திருந்தார்கள். வண்டியிலிருந்து இறங்கின கண்ணனை ஷண்முகம் பார்த்து விட்டான். "அப்பா அத்தைமகன் கண்ணன் மாதிரி இருக்கப்பா" என்று கத்தினான். கண்ணனும் மாமாவையும் ஷண்முகத்தையும் பார்த்து அவர்களிடம் ஓடிவந்தான். "கண்ணா நீ மட்டுமா வந்தாய் வேறு யாரும் வரவில்லையா?" என்றார்? மாமா. "மாமா அப்பாவுக்கு ஏதோ ரொம்ப வேலையிருக்கிறதாம். என்னை மட்டும் அனுப்பி வைத்தார்கள். உங்கள் வீட்டிலே கொண்டுபோய் விடும்படி அப்பா இதோ நிற்கும் அண்ணாச்சியிடம் சொல்லி விட்டார்கள்" என்றான் கண்ணன். பிறகு எல்லோரும் ஸ்டேஷனை விட்டுப் புறப்பட்டார்கள். கண்ணனின் தாத்தாவீடு கோயில்பட்டிக்கு 2 மைல் தூரத்திலுள்ள கிராமத்தில் இருக்கிறது. ஆதலால் மாட்டு வண்டியில் ஏறினார்கள். வண்டியும் புறப்பட்டது. ஷண்முகமும் கண்ணனும் என்னவெல்லாமோ பேசினார்கள். "உங்கள் ஊரில் கிரிக்கெட் உண்டா?" என்று கண்ணன் ஷண்முகத்தைக் கேட்டான். "ஓ இ[illegible]கிறதே. நாங்கள் லீவு நாட்[illegible]ளில் அந்த காட்டோரமாகப்போ[illegible] விளையாடுவோம்" என்றான். வண்[illegible]யும் வீட்டுக்கு வந்து விட்டது. வ[illegible]டியைவிட்டு இறங்கினார்கள். கண்ண[illegible]னைப் பாட்டி பார்த்தாள். "அடே கண்ணா அம்மா அப்பா எல்லோரும் சௌக்கியமா இருக்கார்களா" என்றாள் பாட்டி. "எல்லாரும் சௌக்கியமா இருக்கிறார்கள் இன்றைக்கு கதை சொல்லுகிறாயா பாட்டி' என்றான். "நல்லாசொல்லுகிறேன்டாப்பா பேரப்பிள்ளைகளுக்குக் கதை சொல்லாமல் என்ன. சரி காலைக் கழுவி விட்டு சாப்பிடவா" என்றாள் பாட்டி,

பிறகு எல்லோரும் சாப்பிட்டார்கள். மாலை 4மணிக்கு ஷண்முகத்துடன் கண்ணன் கிரிக்கெட் விளையாட காட்டோரப் பொட்டலுக்குப் போனான். விளையாடினான். கண்ணன்தான் நன்றாக விளையாடினான். விளையாடவந்த எல்லாப் பையனும் கண்ணனுடன் ரொம்ப சிநேகமாகி விட்டார்கள். இப்படியே நாலைந்து நாட்கள் சென்றன.

ஒரு நாள் மாலையில் கண்ணன் விளையாடப் போனான். போவதற்கு நேரமாகி விட்டது. மற்றவர்கள் விளையாடிக் கொண்டிருந்தார்கள். அவர்கள் ஆடி முடிந்ததும் தான் கண்ணன் விளையாட முடியும். விளையாடிக் கொண்டிருந்த இடத்துக்கு அருகே ஒரு சிறு காடு இருந்தது. காட்டிற்குள்ளே போய்ப் பார்க்கலாமே என்று ஒற்றயடிப் பாதை வழியாக கண்ணன் காட்டிற்குள்ளே போனான். கொஞ்சதூரம் போய் விட்டான். யாரோ பேசும் சத்தம் கேட்டது. உடனே நின்றான். உற்றுக் கேட்டான்.

"அண்ணே இந்த இடந்தான் நல்லது, யாரும் இந்த இடத்திற்கு வரமாட்டாகள். இங்கே தோண்டலாம்" என்றான் ஒருவன். மண் வெட்டும் சப்தம் கேட்கிறது. சற்று நேரந்தான் கேட்டது. பிறகு சத்தம் நின்றது. மறுபடியும் "அண்ணே சரியா ராத்திரி 3 மணிக்கு அந்த மிராசுதார் கந்தசாமி பிள்ளை வீடடுக்குப் போவோம். அவர்கள் வீட்டு சமையல்கார சங்கரன் கதவைத் திறந்து வைத்திருப்பான். நிறைய நகைகள் இருக்கிறதாம். நல்ல இடம்தான் இந்தக்காடு. இங்கே புதைத்து விடலாம்" என்ற பேச்சுக்குரல் கேட்டது. பேச்சுக்குரல் இல்லை. திருடர்கள் போய்விட்டார்களா என்று பார்த்துக்கொண்டே ஒளிந்து நின்றான் கண்ணன். திருடர்கள் போய் விட்டார்கள். அவர்கள் குழி வெட்டிய இடத்திற்குப் போனான் கண்ணன். குழியை மண்ணால் மூடினான். விளையாடும் இடத்திற்கு வந்தான்.

அவன் மூளையிலே திராட்சை ரசம் வேலை செய்ய ஆரம்பித்தது. முதலாவதாக நடனமாட ஆரம்பித்தான். தள்ளாடினான். மயங்கினான். பாதி பிராணன் போய் விட்டது. தள்ளாடித் தள்ளாடி மாறி மாறி கழுத்திலே உட்காருகிறான். பார்த்தேன். முன்மாதிரி கழுத்தை நெரிக்கவில்லை. கால்களைப் பிரித்தேன். குனிந்த வாக்கிலே நின்றேன். தொபீரென்று கீழே விழுந்தான். பேச்சு மூச்சு இல்லாது கிடந்தான். மரங்களுக்கு நடுவே கிடந்த பெரிய கல் ஒன்றைக் கொண்டு வந்து என்னை சித்திரவதை செய்த அவன் மண்டையிலே போட்டேன். மண்டை உடைந்தது. ரத்த ஆறு பொங்கி வழிகிறது. செத்தான். ஆண்டவன் அருளால் ஒழிந்தான்.

பிணத்தைப் பார்த்ததும் எனக்குத் தைரியம் வந்தது. கடல்கரைக்குப் போனேன். அங்கே அப்பொழுது தான் ஒரு கப்பலை நங்கூரம் பாய்ச்சி கப்பலை விட்டுப் பிரயாணிகள் இறங்கினார்கள். கப்பல் பிரயாணத்திற்கு வேண்டிய தண்ணீரும், பழங்களும் நிரப்பிக் கொள்வதற்காகத்தான் இறங்கினார்கள். அவர்கள் என்னைப்பார்த்ததும் என்னைச் சுற்றிக்கொண்டு, பல கேள்விகள் கேட்டார்கள். நானும், தரை கடல்களில் நடந்தவற்றைச் சொன்னேன். தீவிலே கிழவனைக்கொன்ற கதையையும் சொன்னேன். (தொடரும்)



உங்களுக்கு தெரியுமா?

1. முகலாய சக்ரவர்த்தி அக்பர் இறந்தார். இறந்ததும் அவர் சொத்துகளைக் கவனமாகக் கணக்கெடுத்தார்கள். விலை உயர்ந்த ஆபரணங்கள் ஏராளமாய் இருந்தன. அத்துடன் எல்லாரும் ஆச்சரியப்படும்படியான ஒரு நிதி இருந்தது. அது என்ன தெரியுமா? பல சிறந்த கவிஞர்களும் எழுத்தாளர்களும இய|ற்றிய 24,000-ம் புத்தகங்களை, அழகாக பைண்டு செய்து, அலமாரியில் வைத்திருந்தாராம். அந்த நூல்களின் உத்தேச மதிப்பு 64½ லக்ஷம் ரூபாய் என்று சொல்லுகிறார்கள்

2. முதன் முதலில் இங்கிலாந்தில் ஸ்தாபிதமான இந்திய வியாபாரக் கம்பெனி "காமாஸ்" என்பது. இது 1855-ஆம் வருவருஷம் ஏற்படுத்தப்பட்டது. இந்த கம்பெனியின் பங்குதார்களில் ஒருவர், காலஞ்சென்ற தாதாபாய் நௌரோஜி.

3. அந்தமான் தீவுகளில் 1858-ம் வருஷம் வரை நாய்களே இல்லை. அதன் பிறகுதான், அந்தத் தீவுகளில், வீடு காவலுக்காக நாய்களை ஏற்றுமதி செய்தார்கள்.

4. தார் அல்லது கீல் ரோட்டு முதலில் இங்கிலாந்தில் நாட்டிங்காம்என்றஊரில் 1845-ஆம் வருஷம் போட்டார்கள்.

உங்கள தம்பி தங்கைகள் முயல் பார்க்க ஆசைப்படுவார்கள் அல்லவா? படத்தில் கையை வைத்து நிழல் படம் காட்டுங்கள்.

வேப்பம்பூ ரசம்

புது வருஷம் பிறக்கப் போகிற தென்று வேப்பமரம் சொல்லுகிறது. சொல்லுகிறதா? பூப் பூத்துக் காண்பிக்கிறது.

வேப்பம்பூ ரசம் என்றால் பாட்டி மார்களுக்கும், தாத்தாக்களுக்கும் ரொம்ப ரொம்ப பிடிக்கும். அவர்களும் சின்னப் பிள்ளைகளாய் இருந்தபொழுது 'அப்பா கசக்கிறது, என்றுதான் சொல்லுவார்கள். உங்களுக்கும் வேப்பம்பூ கசக்கத்தான் செய்யும். கசந்தால் என்ன? உடம்புக்கு ரொம்ப ரொம்ப நல்லது. பித்தத்தால் உண்டாகிற நோய்களை விரட்டி அடிக்கும். வீணாகப்போகும் வேப்பம் பூவைச் சேகரித்துப் பாட்டியிடம் கொடுங்கள். பாட்டி பக்குவப் படுத்தி வைப்பாள். வருஷம் பூராவும் வேப்பம்பூ ரசம் சாப்பிடலாமல்லவா?

பெரிய பிச்சைக்காரன்

ஜெர்மனியில் எரிக் வெர்னர் என்று ஒரு பிச்சைக்காரன் இருக்கிறான். அவன் நேரில் போய்ப் பிச்சை எடுப்பதில்லை. அவனிடம் நாள் தோறும் காலையில் ஆயிரக் கணக்கான பிச்சைக் காரர்கள் வருகிறார்கள். எப்படி 'எங்கே எந்தெந்தவிதமாக பிச்சை' எடுக்க வேண்டும் என்று அவர்களுக்குத் திட்டம் போட்டு சொல்லி அனுப்புவான். பிச்சை எடுத்துக்கொண்டு வந்து மாலையில் எல்லாரும் ஒரு பொட்டலில்' எரிக் தலைமையில் கூடுவார்கள். அவர்களிடம் ஆள் ஒன்றுக்கு நூற்றுக்கு 20 வீதம் வசூலித்துவிடுவான். இப்படி வசூலிக்கும் தொகை, அவன் சொந்தச் செலவிற்கில்லை. அதைப் பிச்சைக்காரர்களின் உதவி நிதிக்குச் செலுத்திவிடுகிறான். எரிக் வெர்னர், பிச்சைக்காரனில் பெரிய பிச்சைக்காரன் அல்லவா?

(6-ம் பக்கம் தொடர்ச்சி)

'உன் நீலரிப்பனை உன் பையிலே வச்சிருக்கேன். போய் எடுத்துக்கோ!'' என்றாள் கோபமாக.

"சரோஜா ரிப்பன் எனக்கு எதுக்கு? நீயே வைத்துக்கோ. ஆனா நம்ம இனிமே அடிச்சுக்கப் படாது." என்றான் முத்து.

சரோஜாவிற்கு இதைக் கேட்டதும் ஆச்சரியமாயிருந்தது. 'இதோ, அண்ணா வந்துட்டனும்மா!'' என்று ஆனந்தம் மேலிட்டுக் கத்தினாள்.

அதைக்கேட்டு அங்கு வந்த அம்மாவிற்கு அவர்களைப் பார்த்ததும் சந்தோஷமாயிருந்தது.

போஸ்டாபீஸ்

ஐக்கிய அமெரிக்காவில் ஐம்பதினாயிரம் தபால் ஆபீசுகள் இருக்கின்றன. அத்துடன் ரயில்வே தபால் ஆபீசுகள் 5000-ம் உள்ளன. ஐக்கிய அமெரிக்காவிற்குள் தினந்தோறும் 13,000 ரயில்கள் தபால்களை ஓரிடத்திலிருந்து மற்றொரு இடத்துக்குக் கொண்டு செல்லுகின்றன. நியூயார்க் பிலடெல்பியா போஸ்டன் ஆகிய மூன்று அமெரிக்க நகரங்களில் சுமார் 30 மைல்தூரம் பூமிக்குள் தபால் ரயில் வண்டிகள் ஓடுகின்றன. அமெரிக்காவில் 100 தபாலாபீஸ்கள், சொந்த விமானம் வைத்து, தபால்களைச் சேகரித்து, தினம் பட்டுவாடா செய்கின்றன.

லைபிரரி

புத்தகங்களைச் சேர்த்து வைக்கும் இடத்துக்கு 'லைபிரரி' அல்லது வாசக சாலைஎன்று பெயர். முதலில் வெகு காலத்துக்கு முன் பூர்வகுடிகள் மிருகங்களின்தோலைப் பதப் படுத்தி' அதில் எழுதி வந்தார்கள். பிறகு களிமண்ணால் அதில் எழுத்துக்களைச் செய்து' அவற்றை எழுத்துக் கூட்டிச் சேர்த்து வாசித்து வந்தார்கள். அதற்கப்புறம் பேப்பரில் எழுதும் வழக்கம் வந்தது. 2000 வருஷங்களுக்கு முன்னால் எகிப்தில் டாலமி ஒரு பெரிய வாசகசாலை ஏற்படுத்தினான். இதில் லக்ஷக்கணக்கில் எத்தனையோ புத்தகங்களும் கைப்பிரதிகளும் இருந்தன. உலகின் பல பாகங்களில் இருந்தும் பலர் இங்கு வந்து வாசித்துப் போக வருவார்கள். ரோம் நகரில் 1900 வருஷங்களுக்கு முன் ஒரு வாசக சாலை ஏற்பட்டது. 1476-ஆம் வருஷத்துக்குப் பிறகுதான் அச்சிட்ட நூல்கள் லைபிரரியில் வைக்கப்பட்டன. அதற்கு முன்னால் எல்லாம் கையெழுத்துப் பிரதிகளே. உலகில் முதலில் புத்தகம் அச்சிட்டவர்கள், சீனர்களே. இங்கிலாந்திலும், பிரான்சிலும் அரசாங்க லைபிரரிகள் ஒவ்வொன்றிலும் இப்போது 45-லக்ஷம் புத்தகங்கள் வீதம் இருக்கின்றன.

ஐந்து குழந்தைகள்

கனடா தேசத்தில், ஒரு சிறு கிராமத்தில் 1934-ம் வருஷம் மே மாதம் 28-ந் தேதி, ஒரு பெண்ணுக்கு ஒரே பிரசவத்தில் ஏககாலத்தில் ஐந்து குழந்தைகள் பிறந்திருக்கின்றன. பிறந்ததும் நிறுத்துப் பார்த்ததில், ஐந்து குழந்தைகளும் 11½ பவுண்டு எடை இருந்தன. தாயும ஐந்து பிள்ளைகளும் திடகாத்திரமாய் இப்பொழுதும வசித்து வருகிறார்கள்.

நீதிக்கதைகள்

துஷ்ட நாய்

ஈசோப்பு

ஒரு எஜமான். அவனிடம் ஒரு நாய்க்குட்டி இருந்தது. அது படு சுட்டி. வீதியில் யாரும் போனால், குலைக்காமல் போய்க் கடித்துவிடும். துஷ்ட நாய்க்குட்டியை எப்படி அடக்குவது? என்று எஜமான் யோசித்தான். அவனுக்கு ஒன்றும் தோன்றவில்லை. பிறகு அதன் கழுத்தில் ஒரு மணியைக் கட்டினான். அது சதா ஒலித்துக் கொண்டிருந்தது. அந்த மணிச் சத்தத்தைக் கேட்டாவது, ஜனங்கள் எச்சரிக்கையாய் இருக்கட்டும் என்று நினைத்தான் எஜமான்.

எஜமான் எண்ணம் நாய்க் குட்டிக்குத் தெரியுமா? அது, தன் கழுத்தில் மணி கட்டியிருப்பதைப் பெருமையாய் எண்ணிக் கொண்டது. அது, ஓடிவரும்போது கழுத்துமணி, "கிணிங்...கிணிங்..." என்று ஒலித்துக் கொண்டிருப்பதை, கௌரவமாக எண்ணியது. மணியை 'கிணிங்...கிணிங்...' என்று ஆட்டி அலைத்துக்கொண்டு நாய்க்குட்டி ஊரெல்லாம் சுற்றித் திரிந்தது.

இதைப் பார்த்தது, ஒரு கிழட்டு நாய். அந்த குட்டி நாயின் கர்வத்தை நினைத்தது. வருந்தியது. அதனிடம், "கர்வமுள்ள நாய்க் குட்டியே! நீ முட்டாள். உன் கழுத்தில் கட்டியிருக்கும் மணியைப்பற்றி பெருமை கொள்

ளாதே. மமதை அடையாதே. சந்தோஷப் படாதே. அப்படி சந்தோஷம அடைந்தால், அதை விட மூடத்தனம் வேறில்லை. அந்தக் கழுத்து மணி, 'உனக்கு இகழ்ச்சி தரும் அவமானச் சின்னம் என்று நினை' என்று சொல்லியது.

அடிக்கடி தவறுதலாய், இகழ்ச்சி புகழ்ச்சியாய்க் கருதப்படுகிறது.

எ. சாமித்தம்பி, ஆரப்பற்றை, கா..தான்குடி.

கேள்வி: 1. அணில் பழைய இதழ்கள் மலர் 3 இதழ் 10 தொடக்கம் 35 இதழ்வரையும் உள்ளவை அனுப்ப முடியுமா?

2. பாட்டரி என்றால் என்ன?

3. பத்திரிகைக்கு அனுப்பும் விஷயங்களை ஒரு பக்கத்தில் எழுத வேண்டுமென்பது ஏன் அண்ணா?

4. காந்திஜி முன்பெல்லாம் சிறையில் இருக்கும் பொழுது துப்பாக்கியால் சுட்டால் கூட இறக்க மாட்டாராமே? இது உண்மையா?

5. இந்தியாவில் எத்தனைபேர் தமிழ் பேசுகிறார்கள்? நேருவிற்குத் தமிழ் பேசத் தெரியுமா?

பதில்: 1. மலர் 3, இதழ் 10 முதல் இதழ் 18வரை கிடைக்கும். இதழ் 18க்குப் பிறகு மலர் 4 முதல் அணில் மாதப் பத்திரிகையாக வெளிவந்து கொண்டிருந்தது. 2. 'பாட்டரி' என்றால் ரசாயனப் பொருள்களால் ஆன மின்சார சக்தி கொடுக்கும் ஒரு வஸ்து. கை விளக்குகளிலும், மோட்டார் ஓடுவதற்கும் மின்சார நிலையம் இல்லாத ஊர்களில் வைத்திருக்கும் ரேடியோவுக்கும் 'பாட்டரி' மூலம் மின்சார சக்தி கொடுக்கலாம். 3. கட்டுரைகளை ஒரு பக்கத்தில் எழுதினால் படிப்பவருக்கு வசதியாக இருக்... அச்சுக் கோர்ப்பவர் ...ர்க்க வசதியாகவும் ... காந்திஜியை எப்பொழு... முடியாது. அவருடைய ... சுட முடியும். உயிரைச் ...து. 5. இந்தியாவில் சுமார் ...று கோடிப்பேர் தமிழ் பேசுகிறார்கள். நேருஜிக்குத் தமிழ் எழுதப் படிக்க தெரியாது. ஏதோ சில வார்த்தைகள் தெரியும்.

அ. முத்து, அடையாறு

கே: அண்ணா உணவுப் பொருள்களில் ப்ரோட்டீன் சத்து அதிகம் வேண்டுமென்கிறார்களே அது என்ன அண்ணா?

ப: உணவுப் பொருள்களில் உள்ள... துகளில் ரொம்பவும் முக்கியமா... ப்ரொட்டின் சத்துதான். அது உட... வளர்ச்சி செய்யும். அது தேய்ந்து போன தசை நார்களைச் சீர்படுத்தும் உடல் பலம் பெறுவதற்கும் ப்ரொட்டின் சத்துள்ள உணவுப்பொருள்களைச் சாப்பிடலாம் பால், முட்டை, இறைச்சி மீன்—இவைகளில் ப்ரோட்டின் நிறைய இருக்கிறது. காய்கறிகளிலும் ப்ரோட்டின் இருக்கிறது. மரக்கறி வகைகளில் பருப்பு வகைகளில் ப்ரோட்டின் நிறைய இருக்கிறது. அரிசி, கோதுமை, தினை பார்லி இவைகளில் கொஞ்சமாகவே தான் ப்ரோட்டின் இருக்கிறது. தானிய மணியில், உள்ளே இருக்கும் மாப்பண்டத்தில் இருப்பதைக் காட்டிலும் தானியத்தின்மேல பாகத்தில்தான் ப்ரோட்டின் இருக்கிறது. ஆகையால் கோதுமை, அரிசி இவைகளை அதிகமாகத் தீட்டுவதால் இந்த ப்ரோட்டின் சத்து சேதமாகி விடுகிறது. அரிசி, கோதுமையைத் தீட்டக் கூடாது. மரக்கறி உணவு சாப்பிடுபவர்களுக்கு பால், பருப்பு மூலம், ப்ரோட்டின் சத்து கிடைக்கும். கீரை, கிழங்கு, பழவகைகளில் ப்ரோட்டின் சத்து கிடையாது.

113 நாட்கள் கடலில் வாழ்ந்த வீரன்

பூன் லிம் என்ற ஒரு சீனர் ...காலத்திலே வேலை செய்துவந்த பிரிட்... கப்பல் டார்ப்பிடோ குண்டு தாக்கி மூழ்கி விட்டது. அவர் ஒரு படகில் இறங்கித் தப்பினார். அதில் 50 நாட்களுக்கு வேண்டிய உணவுப் பொருள்கள் இருந்தன. அவை தீர்ந்ததும் அவர் கடலில் பறக்கும் பறவைகளை கையாலேயே பிடித்தும் ஒரு இரும்புக் கொக்கியைக் கொண்டு மீன்களைப் பிடித்தும் தின்று வந்தார். இறுதியில் பிரேஸில கடற்கரைக்கு அப்பால் காணப்பட்டு கரையில் சேர்க்கப்படும் வரை இதேமாதிரி கடலில் காலம் கழித்து வந்தார். இப்படிக் கடலில் 113 நாட்கள் உயிர் வாழ்வதற்கு வழி காட்டியிருக்கும் அந்த சீனருக்கு அமெரிக்காவில் நிரந்தரமாக வசிக்க உதவியளிக்கும் மசோதா ஒன்றை ஸெனட்டர் மாக்னுஸன் கொண்டு வந்தார்.

இருமலின் வேகம்

இருமல் துளிகளும் தும்மல்களும் சுமார் நாலடி வரையிலும் நிமிஷத்துக்கு 150 அடி வேகமாய்ச் செல்லக்கூடும்.

22424

இந்தக் குழந்தைக்கு இந்த டாக்டர் என்ன செய்கிறான்? தெரியுமா? நியூயார்க் நகர வைத்தியசாலையின் டாக்டர் மருந்தை ஊசி மூலம் குழந்தையின் கையில் ஏற்றுகிறான். 'டிப்திரியா' என்ற வியாதி வராமல் இருப்பதற்காக மருந்து ஏற்றுகிறான். 'டிப்திரியா' கொடிய வியாதி. தொண்டையிலே காளான் மாதிரி பூக்கும். தொண்டை அடைத்துக் கொள்ளும். மூச்சுப் போக்கு வரத்தை அடைத்துவிடும். பிறகு என்ன ஆகும்? உங்களுக்கே தெரியும் இது ஒரு தொத்து வியாதி. அமெரிக்காவில் இந்த வியாதியே வராமல் தடுப்பதற்காகவும், இது மாதிரி தொத்து வியாதிகள் வராமல் தடுப்பதற்காகவும், மே மாதம் முதல் தேதியில் அமெரிக்காவில் பகல் நேரங்களில் உள்ள வைத்தியசாலைகளில் குழந்தைகளுக்கு இலவசமாக வைத்தியம் செய்கிறார்கள். மே முதல் தேதி அன்று தான், உலகமெங்கும் மேதின விழா கொண்டாடுவார்கள். அத்தினம் உழைப்பாளிகளின் திருவிழா.

ஆசிரியர்: வை. கோவிந்தன்

சென்னை—2, பாப்பா பிரசில் ஜெ. செல்லையாவால் அச்சிடப் பெற்று, வை. கோவிந்தனால் வெளியிடப்பெறுகிறது.

வருட சந்தா ரூ. மூன்று.
இரண்டு வருடங்களுக்கு ரூ. ஐந்து.
சக்தி காரியாலயம், சென்னை—14